**விசேட செலவின அலகுகள் (தலைப்பு 1 முதல் 22 வரை) மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2012 ஆம் ஆண்டு**

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1 ஆம் பகுதி - விசேட செலவின அலகு தலைப்புகளுக்குரிய கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு விசேட செலவின அலகுத் தலைப்புகளுக்கு உரித்தான விபரமான அறிக்கை

## 1 ஆம் பகுதி

**விசேட செலவின அலகு தலைப்புகளுக்குரிய கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை**

**1. விசேட செலவின அலகுகளிற்குரிய செலவுத் தலைப்புகள், தொடர்புடைய திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்கள்**

| தலைப்பு | திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்களின் பெயர்கள் |
|---|---|
| 1 | அதிமேதகு சனாதிபதி |
| 2 | பிரதமர் அலுவலகம் |
| 3 | விசேட செயற்பாடுகளுக்கான பணியகம் (சிரேஷ்ட அமைச்சர்கள்) |
| 4 | மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் |
| 5 | அமைச்சரவை அலுவலகம் |
| 6 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு |
| 7 | நீதிச் சேவை ஆணைக்குழு |
| 8 | தேசிய பொலிஸ் ஆணைக்குழு |
| 9 | நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபை |
| 10 | இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு |

| | |
|---|---|
| 11 | நிதி ஆணைக்குழு |
| 12 | தேசிய கல்வி ஆணைக்குழு |
| 13 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| 14 | சட்டமா அதிபர் திணைக்களம் |
| 15 | சட்ட வரைஞர் திணைக்களம் |
| 16 | பாராளுமன்றம் |
| 17 | பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகம் |
| 18 | பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகம் |
| 19 | பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் |
| 20 | தேர்தல்கள் திணைக்களம் |
| 21 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி |
| 22 | நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் |

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த ஏற்பாடும் செலவும்**

22 திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 13,987 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 11,592 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளிலிருந்தான தேறிய சேமிப்புக்கள் ரூபா 0.11 மில்லியனிற்கும் ரூபா 1,722 மில்லியனிற்கும் இடைப்பட்ட வீச்சில் அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 0.0007 சதவீதத்திற்கும் 12.31 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | திணைக்களம் / அலுவலகம் / ஆணைக்குழு | தேறிய நிதியேற்பாடு | | பயன்பாடு | | சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் |
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 1 | அதிமேதகு சனாதிபதி | 4,010.410 | 3,647.755 | 3,888.694 | 2,047.384 | 121.716 | 1,600.371 |
| 2 | பிரதமர் அலுவலகம் | 187.725 | 81.400 | 178.226 | 48.713 | 9.499 | 32.687 |
| 3 | விசேட செயற்பாடுகளுக்கான பணியகம் (சிரேஷ்ட அமைச்சர்கள்) | 277.236 | 136.500 | 271.921 | 103.243 | 5.315 | 33.257 |
| 4 | மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் | 182.520 | 34.500 | 170.418 | 23.466 | 12.102 | 11.034 |
| 5 | அமைச்சரவை அலுவலகம் | 62.720 | 20.930 | 54.446 | 6.981 | 8.274 | 13.949 |
| 6 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | 110.110 | 18.600 | 108.851 | 15.451 | 2.259 | 3.149 |
| 7 | நீதிச் சேவை ஆணைக்குழு | 37.367 | 50.500 | 35.584 | 0.277 | 1.783 | 50.233 |
| 8 | தேசிய பொலிஸ் ஆணைக்குழு | 38.297 | 4.252 | 36.042 | 0.216 | 2.255 | 4.036 |
| 9 | நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபை | 12.5555 | 0.150 | 11.705 | 0.052 | 0.850 | 0.098 |
| 10 | இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு | 136.993 | 99.000 | 131.842 | 69.389 | 4.151 | 29.611 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 11 | நிதி ஆணைக்குழு | 37.557 | 32.400 | 34.740 | 0.808 | 2.817 | 31.592 |
| 12 | தேசிய கல்வி ஆணைக்குழு | 25.196 | 0.385 | 20.958 | 0.279 | 4.238 | 0.106 |
| 13 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | 144.075 | 2.950 | 137.746 | 2.184 | 6.329 | 0.766 |
| 14 | சட்டமா அதிபர் திணைக்களம் | 444.425 | 20.400 | 428.620 | 15.257 | 15.805 | 5.143 |
| 15 | சட்ட வரைஞர் திணைக்களம் | 51.477 | 82.600 | 48.533 | 7.570 | 2.944 | 75.030 |
| 16 | பாராளுமன்றம் | 1,621.850 | 177.040 | 1,570.244 | 115.158 | 51.606 | 61.882 |
| 17 | பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகம் | 24.300 | 1.200 | 22.581 | 0.920 | 1.719 | 0.280 |
| 18 | பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகம் | 34.430 | 7.421 | 33.491 | 7.020 | 0.938 | 0.401 |
| 19 | பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் | 57.415 | 10.700 | 52.802 | 9.391 | 4.613 | 1.309 |
| 20 | தேர்தல்கள் திணைக்களம் | 939.841 | 26.600 | 930.113 | 23.773 | 9.728 | 2.827 |
| 21 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 710.092 | 378.147 | 694.444 | 223.975 | 15.648 | 154.172 |
| 22 | நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் | 8.037 | 0.100 | 7.948 | 0.081 | 0.089 | 0.019 |
| | மொத்தம் | **9,153.628** | **4,833.530** | **8,870.949** | **2,721.588** | **284.679** | **2,111.942** |

## 2.2 வருமானக் கணக்கு

### மதிப்பீட்டு மற்றும் உள்ளபடியான வருமானம்

22 திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்களிற்காக 02 திணைக்களங்களினால் 2012 ஆம் ஆண்டில் இரண்டு வருமானத் தலைப்புகளுக்காக ரூபா 77 மில்லியன் வருமானமொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் வருமானம் ரூபா 17.56 மில்லியனால் விஞ்சி ரூபா 94.56 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் 22.80 சதவீதத்தினால் மிகையாக வருமானம் சேகரித்துக் கொள்ளப்பட்டிருந்தன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் | வருமானக் குறியீடு | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | மிகைச் சேகரிப்பு |
|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 2003-02-01 | 45.000 | 60.203 | 15.203 |
| சட்டமா அதிபர் | 2003-02-11 | 32.000 | 34.360 | 2.360 |
| மொத்தம் | | 77.000 | 94.563 | 17.563 |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

22 திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்களிற்காக அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்கு நடவடிக்கைகளிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த பின்வரும் எல்லைகள் 21 நிறுவனங்களினால் பின்பற்றப்பட்டிருந்ததுடன் ஒரு நிறுவனத்தினால் ஆகக் கூடிய வரவு எல்லை ரூபா 291,863 இனால் விஞ்சியிருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | | வரவு மீதி எல்லையை விஞ்சியமை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகூடிய எல்லை | உள்ளபடியான | அதிகுறைந்த எல்லை | உள்ளபடியான | அதிகூடிய எல்லை | உள்ளபடியான | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 1 | 00101 | 20,000,000 | 13,517,434 | 12,000,000 | 18,310,834 | 90,000,000 | 73,231,781 | - |
| 2 | 00201 | 7,000,000 | 3,248,042 | 3,200,000 | 4,031,506 | 23,600,000 | 20,638,820 | - |
| 3 | 00301 | 2,500,000 | 2,466,112 | 600,000 | 1,414,882 | 8,000,000 | 5,773,580 | - |
| 4 | 00401 | 12,200,000 | 10,805,037 | 5,400,000 | 9,919,963 | 52,000,000 | 32,495,336 | - |
| 5 | 00501 | 2,600,000 | 2,595,796 | 2,000,000 | 2,736,077 | 11,000,000 | 11,291,863 | 291,863 |
| 6 | 00601 | 8,000,000 | 3,016,904 | 2,000,000 | 5,125,517 | 32,000,000 | 21,883,293 | - |
| 7 | 00701 | 3,000,000 | 1,414,095 | 1,200,000 | 1,950,269 | 17,500,000 | 8,259,352 | - |
| 8 | 00801 | 1,950,000 | 1,288,317 | 1,500,000 | 1,742,018 | 11,000,000 | 4,216,917 | - |
| 9 | 00901 | 1,000,000 | 388,487 | 260,000 | 345,570 | 4,000,000 | 1,219,236 | - |
| 10 | 01001 | 6,000,000 | 2,608,065 | 2,500,000 | 4,000,143 | 25,000,000 | 17,789,687 | - |
| 11 | 01101 | 4,000,000 | 2,020,679 | 4,000,000 | 1,348,384 | 20,000,000 | 7,509,386 | - |
| 12 | 01201 | 1,500,000 | 663,247 | 600,000 | 1,305,319 | 6,000,000 | 2,747,287 | - |
| 14 | 01401 | 23,500,000 | 16,890,877 | 10,000,000 | 13,619,423 | 90,000,000 | 46,511,882 | - |
| 15 | 01501 | 5,300,000 | 2,644,811 | 2,000,000 | 3,532,865 | 24,000,000 | 14,163,257 | - |
| 16 | 01601 | 39,500,000 | 26,907,810 | 20,000,000 | 27,932,046 | 175,000,000 | 144,082,287 | - |
| 17 | 01701 | 1,200,000 | 1,196,000 | 800,000 | 1,330,225 | 3,500,000 | 2,185,355 | - |
| 18 | 01801 | 2,000,000 | 1,282,200 | 1,000,000 | 1,520,120 | 7,500,000 | 4,379,559 | - |
| 19 | 01901 | 1,500,000 | 1,261,790 | 1,000,000 | 1,961,169 | 9,000,000 | 3,879,441 | - |
| 20 | 02001 | 23,000,000 | 14,068,857 | 14,000,000 | 15,200,062 | 80,000,000 | 58,182,585 | - |
| 21 | 02101 | 58,000,000 | 52,191,250 | 40,000,000 | 51,829,346 | 300,000,000 | 265,787,391 | - |
| 22 | 02201 | 800,000 | 713,300 | 180,000 | 303,018 | 30,000,000 | 1,770,638 | - |

### 2.3.2 பொதுவைப்புக் கணக்கு

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 22 திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்களில் 16 தலைப்புக்களின் பொதுவைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 637,708,965 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அது தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவினத் தலைப்பு | திணைக்களம்/ அலுவலகம் / ஆணைக்குழு | கணக்கு இலக்கம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி வரவு/(செலவு) |
|---|---|---|---|
| | | | ரூபா |
| 1 | அதிமேதகு சனாதிபதி | 6000/0006/0077 | (402,834,548) |
| 2 | பிரதமர் அலுவலகம் | 6000/0015/0001<br>6000/0015/0002 | (153,999,085)<br>(1,784,268) |
| 3 | விசேட செயற்பாடுகளுக்கான பணியகம் (சிரேஷ்ட அமைச்சர்கள்) | 6000/0015/0003 | (3,590,824) |
| 5 | அமைச்சரவை அலுவலகம் | 6000/0015/0003 | (1,302,518) |
| 6 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | 6000/0015/0008 | (1,461,239) |
| 7 | நீதிச் சேவை ஆணைக்குழு | 6000/0002/0032 | (124,149) |
| 8 | தேசிய பொலிஸ் ஆணைக்குழு | 6000/0015/0009 | (849,893) |
| 10 | இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு | 6000/0015/0010 | (4,421,340) |
| 11 | நிதி ஆணைக்குழு | 6000/0015/0013 | (530,175) |
| 12 | தேசிய கல்வி ஆணைக்குழு | 6000/0015/0014 | (68,975) |
| 13 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | 6000/0015/0170 | 12,367,420 |
| 14 | சட்டமா அதிபர் திணைக்களம் | 6000/0015/0110 | (7,377,767) |
| 15 | சட்ட வரைஞர் திணைக்களம் | 6000/0015/0111 | (2,758,815) |
| 16 | பாராளுமன்றம் | 6000/0015/0004 | (14,642,211) |
| 20 | தேர்தல்கள் திணைக்களம் | 6000/0015/0011 | (11,320,216) |

| | | | |
|---|---|---|---|
| 21 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 6000/0015/0012 | (43,010,362) |
| | மொத்தம் | | 637,708,965 |

### 2.3.3 கட்டுநிதி கணக்குகள்

22 திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்களில் 20 இல் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கட்டுநிதிக் கணக்குகளின் மீதி ரூபா 19,462,075 ஆக இருந்ததுடன் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | திணைக்களங்களம்/ அலுவலகம் / ஆணைக்குழு | கணக்கு இலக்கம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி வரவு/(செலவு) |
|---|---|---|---|
| | | | ரூபா |
| 1 | அதிமேதகு சனாதிபதி | 7002/0000/0117/0011 | 315,217 |
| | | 7003/0000/0077/0012 | (38,558) |
| 2 | பிரதமர் அலுவலகம் | 7002/0000/0118/0012 | 529 |
| 4 | மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் | 7002/0000/0390/0012 | 730,934 |
| 5 | அமைச்சரவை அலுவலகம் | 7002/0000/0119/0012 | 2,121,931 |
| 6 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | 7002/0000/00/0297/0012 | 277,882 |
| 7 | நீதிச் சேவை ஆணைக்குழு | 7002/0000/00/0122/0012 | 12,106,760 |
| 8 | தேசிய பொலிஸ் ஆணைக்குழு | 7002/0000/00/0365/0012 | 17,431 |
| 9 | நிர்வாக மேன்முறையீட்டு நியாயச்சபை | 7002/0000/00/036/0012 | 180,782 |
| 10 | இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு | 7002/000/00/0139/0012 | 694,733 |
| 11 | நிதி ஆணைக்குழு | 7002/000/00/0729/0012 | 8,580 |
| 12 | தேசிய கல்வி ஆணைக்குழு | 7002/000/00/0408/0012 | 495,528 |

| | | | |
|---|---|---|---|
| 14 | சட்டமா அதிபர் திணைக்களம் | 7002/0000/00/0137/0012 | 52 |
| 15 | சட்ட வரைஞர் திணைக்களம் | 7002/0000/00/0138/0012 | 288,929 |
| 16 | பாராளுமன்றம் | 7002/0000/00/0120/0012 | 600 |
| 17 | பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகம் | 7002/0000/00/0275/0012 | 226,720 |
| 18 | பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகம் | 7002/0000/00/0276/0012 | 268,007 |
| 19 | பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் | 7002/0000/00/0277/0012 | 5,470 |
| 20 | தேர்தல்கள் திணைக்களம் | 7002/0000/000/0121/0012 | 61,247 |
| 21 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 7002/0000/00/0001/0012<br>7003/0000/00/0089/0012 | 14,768<br>1,554,136 |
| 22 | நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் | 7002/000/00/0209/0012 | 130,397 |
| | | | -------------- |
| | மொத்தம் | | 19,462,075 |
| | | | ========= |

# பகுதி 2

## ஒவ்வொரு தலைப்புகளிற்கான விபரமான அறிக்கை

## 1. தலைப்பு 1 – அதிமேதகு சனாதிபதி

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சனாதிபதி செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 சனவரி 21 ஆந் திகதி சனாதிபதியின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சனாதிபதி செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

#### (அ) பாதீட்டு முரண்

03 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது ரூபா 993,236,379 ஆக இருந்ததுடன் அது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டின் 95 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

#### (ஆ) பொது வைப்புக் கணக்கு

02 ஆண்டுகளிற்கும் மேலாக நிலவி வருகின்ற ரூபா 37,480,220 தொகையான வைப்புக் கணக்கு மீதிகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

00101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 958,928 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த மீதிகளை அறவீடு செய்வதற்கு அலுவலகத்தினால் இயலாதிருந்தது.

## 1.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

நிதிப் பிரமாணம் 94 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளிற்கும் மேலாக பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்படக்கூடாத போதிலும் மீளாய்வாண்டில் 03 மீண்டெழும் செலவின விடயங்களிற்கும் 05 மூலதன செலவின விடயங்களிற்கும் உரிய சேமிப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 356,994,014 இனால் மிகைத்து ரூபா 401,402,702 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன.

## 1.5 நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்களும் சேதங்களும் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) 12 வாகனங்கள் தொடர்பான வாகன விபத்துக்களிலிருந்து காப்புறுதி நட்டஈடு பெறப்பட்டதன் பின்னர் மேலும் அறவிட வேண்டிய அல்லது பதிவழிக்கக்கூடியதாக இழப்பு மற்றும் நட்டப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட ரூபா 3,715,594 தொகை ஒதுக்கீட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது 24 வாகனங்கள் தொடர்பாக ஏற்பட்ட வாகன விபத்துக்களுக்கான காப்புறுதி நட்டஈட்டுப் பெறுவனவுகள் ஒதுக்கீட்டுக் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.

## 1.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளபடியான பதவியணியினர் | | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிரந்தரம் | தற்காலிகம் | நிரந்தரம் | தற்காலிகம் | | |
| (அ) | சிரேஷ்ட நிலை | 56 | 162 | 45 | 226 | 11 | 64 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 23 | 95 | 16 | 128 | 07 | 33 |
| (இ) | இரண்டாம் நிலை | 326 | 80 | 258 | 104 | 68 | 24 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 603 | 142 | 475 | 168 | 128 | 26 |
| | மொத்தம் | 1008 | 479 | 794 | 626 | 214 | 147 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 214 நிரந்தரப் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 147 தற்காலிக ஊழியர்களின் மிகை எண்ணிக்கைக்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2. தலைப்பு 02 – பிரதமர் அலுவலகம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பிரதமர் அலுவலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 நவம்பர் 28 ஆந் திகதி பிரதமரின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள்

மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 2.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பிரதமர் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 இலிருந்து 2.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாமை

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாகப் பேணிவரப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்**

(i) 02 மூலதன செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,550,000 தொகையான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 15 மீண்டெழும் செலவின விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது ரூபா 8,773,003 ஆக இருந்ததுடன் அது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டின் 6 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

2011 ஏப்ரல் 06 ஆம் திகதி சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 38,836 தொகையான கடன் மீதியும் 2011 ஆகஸ்ட் 17 ஆந் திகதி சேவையை முடிவுறுத்திய உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 3,500 தொகையான விழா முற்பணமும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

செயல் நிமித்த உப கட்டுநிதி தொடர்பாக நி.பி. 371 இன் பிரகாரம் பெறப்பட்ட முற்பணம் அந்தச் செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் பெறப்பட்ட ரூபா 272,582 தொகையான முற்பணம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. ஆவ்வாறே முற்பணம் வழங்கும் போது முறையான பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 நட்டங்களும் சேதங்களும்

மோட்டார் வாகனத்திற்காக மூன்றாம் தரப்பினர் காப்புறுதிப் பூட்கையினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் சந்தைப் பெறுமதியை விடக் குறைந்த பெறுமதியில் காப்புறுதி செய்யப்பட்ட காரணத்தினால் 04 மோட்டார் வாகனங்கள் விபத்திற்குள்ளாகியதன் பின்னர் ஏற்பட்ட ரூபா 1,242,417 கூட்டுத்தொகையான நட்டத்திலிருந்து ரூபா 257,770

தொகையான நட்டஈடு மாத்திரமே பெறப்பட்டிருந்தது. ஆதன் பிரகாரம் ரூபா 984,647 தொகையான இழப்பினை நட்டமாகப் பதிவழிக்கவேண்டியிருந்தது.

## 2.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 14 | 11 | 03 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 05 | 04 | 01 |
| (இ) | இரண்டாம் நிலை | 44 | 43 | 01 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 67 | 62 | 05 |
| | மொத்தம் | 130 | 120 | 10 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 10 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. தலைப்பு 3 – விசேட செயற்பாடுகளுக்கான பணியகம் (சிரேஷ்ட அமைச்சர்கள்)

### 3.1 கணக்காய்வின் நோக்கெல்லை

விசேட செயற்பாடுகளுக்கான பணியகம் தொடர்பான செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 மே 29 ஆந் திகதி செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள்

தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 3.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 3.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் விசேட செயற்பாடுகளுக்கான பணியகம் தொடர்பான செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) மற்றும் (ஆ) இல் உள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 3.4 மற்றும் 3.8 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணிவராமை

அலுவலகத்தினால் நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) பாதீட்டு முரண்**

(i) 06 மீண்டெழும் செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 300,000 தொகையும் 21 மூலதன செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 7,850,000 தொகையும் ஆன தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 38 செலவின விடயங்களுக்கு ரூபா 38,578,000 தொகையான நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 16,638,041 பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 21,939,959 சேமிப்பு அவதானிக்கப்பட்டது. அது அந்த சேமிப்பு உரிய செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாட்டில் 20 சதவீதம் தொடக்கம் 99 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

## 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் அமைச்சினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டமானது 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மேலே 3.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க 2010 மற்றும் இதற்கு பின்னருள்ள அலுவலகத்தின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேலே 3.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.4 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முறையாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.5 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2012 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அலுவலகத்தினால் அந்த அறிக்கை 2013 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்காகச்

சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2011 ஆம் ஆண்டிற்காகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

செயலகத்தினால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கும் குறைவான காலமாக தீர்க்கப்படாதிருந்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 16,368,664 ஆக காணப்பட்டதுடன் ரூபா 401,197 தொகையானது பொறுப்புக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நிதிப் பிரமாணம் | | |
| (i) நி.பி. 66(3)(இ) | 1,450,000 | நிதியேற்பாட்டை மாற்றும் விண்ணப்பப் படிவம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 94(1) | 13,635,278 | ஏற்கப்பட்ட பொறுப்புக்கள் செலவின அளவுகள் எச்சந்தர்ப்பத்திலும் நிதி ஆண்டிற்கான நிதியேற்பாட்டை விஞ்சலாகாத போதிலும் |

| | |
|---|---|
| | நிதியேற்பாடின்றி பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன. |
| (iii) நி.பி. 751(1) | உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான பொருட் பதிவேடு மற்றும் இருப்புப் புத்தகம் என்பன பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நி.பி. 754 | செயலகத்தின் ஆண்டின் இறுதியில் இருப்புப் புத்தகம் சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (v) நி.பி. 756(2)(அ) | களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தர் பொருள் மெய்மையாய்வுச் சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டிருந்தார். |
| (vi) நி.பி. 757(4) | வாகனங்கள் தொடர்பாக அதன் இருப்பு நிலை பற்றி பௌதீக ரீதியில் பரீட்சித்து மெய்மையாய்வுச் சபை அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vii) நி.பி. 1646 | நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) திறைசேரிச் சுற்றுநிருபம்

------------------------

1978 திசெம்பர் 19 ந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 2 ஆம் பந்தி

நிலையான சொத்துப் பதிவேட்டில் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய நிறுவனங்களிலிருந்து உரிய பிரகாரம் பொறுப்பேற்கப்பட்ட 04 வாகனங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பாதீட்டுச் சுற்றுநிருபம்

------------------------

2010 யூன் 01 ஆந் திகதிய பீடீ/356/413/3/2008 ஆம் இலக்க பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் கடிதம்

செயற்திட்ட உதவிகளிலிருந்து வழங்கப்படுகின்ற வாகனங்கள் அந்த செயற்திட்டத்திற்காகவே ஈடுபடுத்த வேண்டிய போதிலும் இடர் முகாமைத்துவ நிலையத்தில் தொடர்பாடல் மற்றும் பின்னூட்டல் இயலளவு அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட வாகனம் விஷேட செயற்பாடுகள் தொடர்பான செயலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

## 3.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

சுகாதார சேவைகளை வழங்குவதற்காகவும் பாதுகாப்பு சேவையினை வழங்குவதற்காகவும் கேள்வி கோரும் போது கேள்விப் பத்திர மதிப்பீட்டிற்காக பயன்படுத்தப்பட்ட பிரதான கேள்விதாரர்கள் தொடர்பான தகவல்கள் கேள்விப்படிவத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் ஒரு விண்ணப்பப் படிவத்தில் ஒரு கேள்விதாரர் கையால் எழுதிய அந்தக் கேள்விதாரரிடமிருந்து வழங்கல்களுக்காக தெரிவுசெய்யப்பட்டிருந்தது.

## 3.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 19 | 04 | 15 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (இ) | இரண்டாம் நிலை | 23 | 22 | 01 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 102 | 102 | - |
| (உ) | ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை | 140 | 140 | - |
| | மொத்தம் | 285 | 269 | 16 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 16 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. ஒதுக்கீட்டுத் தலைப்பு 4 – மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள்

### 4.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் அலுவலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதி அலுவலகத்தின் பதிவாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள்

தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 4.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணைக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 4.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணைக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) மற்றும் (ஆ) இல் உள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 4.4 இலிருந்து 4.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

(i) 04 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,580,000 தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 14 செலவின விடயங்களுக்காக மிகையான ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தினால் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா

10,287,604 ஆக இருந்ததுடன் அது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 11 சதவீதம் தொடக்கம் 81 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

04011 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 291,826 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த மீதிகளை அறவீடு செய்வதற்கு அலுவலகத்தினால் இயலாதிருந்தது.

## 4.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 யூன் 19 ஆந் திகதியே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

### 4.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 செயலாற்றல்

மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் அலுவலகத்தினால் 2012 சனவரி 01 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்குள்ள வழக்குகளின் எண்ணிக்கை 2937 ஆக இருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது புதிதாக பதிவுசெய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 2018 ஆனமையினால் 2012 ஆம் ஆண்டின் போது தீர்ப்பதற்குள்ள மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 4955 ஆகும். இந்த வழக்குகளின் எண்ணிக்கையில் ஆண்டின் போது 1562 வழக்குகள் முடிவடைந்திருந்ததுடன் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தீர்ப்பதற்குள்ள வழக்குகளின் எண்ணிக்கை 3393 ஆகும்.

## 4.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| ஆ ட | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 07 | 06 | 01 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 03 | 07 | - | 04 |
| (இ) | இரண்டாம் நிலை | 119 | 131 | - | 12 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 91 | 123 | - | 32 |
| (உ) | ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை | - | 02 | - | 02 |
| | மொத்தம் | 220 | 269 | 01 | 50 |

ஊ

ழியர்களின் மிகை எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரம் பெறுவதற்காக அலுவலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. தலைப்பு 05 – அமைச்சரவை அலுவலகம்

### 5.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அமைச்சரவை அலுவலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 யூன் 06 ஆந் திகதி அலுவலகத்தின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக் கிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 5.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அமைச்சரவை அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையில் (அ) இல் உள்ள பொது அவதானிப்புகள் மற்றும் 5.4 இலிருந்து 5.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

(i) 01 செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 9,000,000 தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 04 செலவின விடயங்களுக்காக ரூபா 17,070,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 4,911,701 தொகையைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 12,158,299 சேமிப்பு அவதானிக்கப்பட்டது. அச் சேமிப்பு உரிய செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 41 சதவீதம் தொடக்கம் 94 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

## 5.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 5.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்க வில்லை.

### 5.4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2012 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அலுவலகத்தினால் அந்த அறிக்கை 2013 ஏப்ரல் 02 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2011 ஆம் ஆண்டிற்காகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 5.6 இணக்கமின்மைகள்

#### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நிதிப் பிரமாணம் | | |
| (i) | நி.பி. 231(1) மற்றும் (2) | 25,725 | கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்குரிய எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி. 257 | 36,701 | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் உறுதிப்படுத்தப்படாமல் காசு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |
| (iii) | நி.பி. 264(1) | 253,292 | உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்ட அண்ணளவான தொகைக்குரிய தரப்பினரின் பற்றுச்சீட்டு பெறப்பட்டிருக்க வில்லை. |
| (iv) | நி.பி. 1646 | | நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | திறைசேரிச் சுற்றுநிருபம் | | |
| | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க சுற்றுநிருபம் | | கணனி மற்றும் கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபம் | | |
| | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 1.1.3 – 1.1.7 வரையான பந்திகள் | 1,300,936 | இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தரின் கடன் மீதி உரிய காலத்தின் போது மாதாந்த கணக்கு பொழிப்பின் ஊடாக தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண (விஷேட ஏற்பாடு) அதிகாரச்சட்டம் | | ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்காக ரூபா 25 முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |

## 5.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய வடிவமாக இருந்தது. தெரிவுப் பரிசோதனைகளின் போது அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

2010 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் குத்தகைக் கொள்வனவு அடிப்படையின் கீழ் கொள்வனவில் பெறக்கூடிய வாகனங்கள் அமைச்சுச் செயலாளர் மற்றும் சமமான பதவிகளுக்கு உரித்தான ஆகக் கூடிய விலை எல்லை ரூபா 5,000,000 ஆக இருந்த போதிலும் அந்த எல்லையினை விஞ்சி ரூபா 6,750,000 தொகையில் (கே.ஆர்-7399) வாகனம் பெறப்பட்டு அது அலுவலகத்தின் சிரேஷ்ட சட்ட ஆலோசகருக்கு வழங்கப்பட்டிருந்தது.

## 5.8 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 13 | 10 | 03 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 07 | 06 | 01 | - |
| (இ) | இரண்டாம் நிலை | 29 | 21 | 08 | - |
| (ஈ) | ஆரம்ப நிலை | 28 | 24 | 04 | - |
| (உ) | ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை | - | 03 | - | 03 |
| | மொத்தம் | 77 | 64 | 16 | 03 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 16 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. தலைப்பு 6 – அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### 6.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 சனவரி 09 ஆந் திகதி ஆணைக்குழுவின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின்

அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 6.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 6.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) மற்றும் (ஆ) இல் உள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 6.4 இலிருந்து 6.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

03 செலவின விடயங்களுக்காக மிகையான ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தினால் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 2,452,617 ஆக இருந்ததுடன் அது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 35.6 சதவீதம் தொடக்கம் 69.4 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

00601 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2001 யூலை 01 ஆந் திகதி சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 32,320 தொகையான கடன் மீதியை மீதியை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவீடு செய்வதற்கு இயலாதிருந்தது.

## 6.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 6.4.1 கூட்டிணைந்த திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆணைக்குழு அலுவலகத்திற்குரிய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மேலே 6.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அலுவலகத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 44 | 34 | 10 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 05 | 04 | 01 |
| (இ) | இரண்டாம் நிலை | 98 | 83 | 15 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 48 | 33 | 15 |
| | மொத்தம் | 195 | 154 | 41 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 41 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அலுவலகத்தினால் முடியாதிருந்தது.

## 7. தலைப்பு 7 – நீதிச் சேவை ஆணைக்குழு

### 7.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நீதிச் சேவை ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 திசெம்பர் 06 ஆந் திகதி ஆணைக்குழுவின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில்

விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 7.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 7.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நீதிச் சேவை ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையில் (அ) இல் காணப்படுகின்ற பொது அவதானிப்புக்கள் மற்றும் 7.4 மற்றும் 7.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

(i) 03 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 50,150,000 தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) ஒரு செலவின விடயத்திற்காக மிகையான ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தினால் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 10,287,604 ஆக இருந்ததுடன் அது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 27 சதவீதமாகக் காணப்பட்டது.

## 7.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 7.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் ஆணைக்குழுவினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டமானது 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 7.4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மேலே 7.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க 2010 மற்றும் இதற்கு பின்னருள்ள ஆணைக்குழுவின வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் 2012 திசெம்பர் 26 ஆந் திகதியே தயாரிக்கப்பட்டிருந்தது.

### 7.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேலே 7.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆணைக்குழுவினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 7.4.4 உள்ளகக் கணக்காய்வு

ஆணைக்குழுவிற்குரிய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 7.4.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்

2012 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 7.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 12 | 11 | 01 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 06 | 03 | 03 | - |
| (இ) | இரண்டாம் நிலை | 51 | 34 | 17 | - |
| (ஈ) | ஆரம்ப நிலை | 24 | 17 | 07 | - |
| (உ) | ஏனையவை(அமைய) | - | 02 | - | 02 |
| | மொத்தம் | 93 | 67 | 28 | 02 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 28 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களின் மிகை எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரம் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 8. தலைப்பு 08 – தேசிய பொலிஸ் ஆணைக்குழு

### 8.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஏப்ரல் 30 ஆந் திகதி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 8.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 8.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையில் (அ) இல் காணப்படுகின்ற பொது அவதானிப்பு மற்றும் 8.4 இலிருந்து 8.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### பாதீட்டு முரண்

11 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 11 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

## 8.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 8.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் ஆணைக்குழுவினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டமானது 2013 பெப்ரவரி 12 ஆந் திகதியே தயாரிக்கப்பட்டிருந்தது.

### 8.4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மேலே 8.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க 2010 மற்றும் இதற்கு பின்னருள்ள ஆணைக்குழுவின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 8.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேலே 8.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆணைக்குழுவினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 யூலை 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 8.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2012 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட பற்றாக்குறைகள் மற்றும் பணன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியாத பொருட்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 757(2), 770(2) மற்றும் 771(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 8.6 செயலாற்றல்

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அலுவலகங்கள் 12 க்கு கலந்துரையாடப்படும் வருடத்தில் கீழ்க் காணும் பிரகாரம் 601 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

| | முறைப்பாட்டின் தன்மை | எண்ணிக்கை |
|---|---|---|
| (அ) | பொலிஸினால் நடவடிக்கை எடுக்கப்படாமை (உதாசீனம்) | 181 |
| (ஆ) | தாக்குதல் | 16 |
| (இ) | துன்புறுத்தல் | 12 |
| (ஈ) | முறையற்ற விதத்தில் ஈடுபடுத்தல் | 143 |
| (உ) | பக்கசார்பு | 106 |
| (ஊ) | சட்டவிரோதமாக தடுத்து வைத்தல் | 48 |
| (எ) | பொய்க் குற்றச்சாட்டு/ கைது செய்தல் | 32 |
| (ஏ) | இலஞ்சம் மற்றும் ஊழல் | 11 |
| (ஐ) | பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் துன்புறுத்துதல் | 02 |
| (ஒ) | பொலிஸ் தடுப்பில் மரணித்தல் | 02 |
| (ஓ) | ஏனைய (பொலிஸ் உத்தியோகத்தர்களின் முறைப்பாடுகள் உட்பட) | 48 |
| | மொத்தம் | 601 |

மீளாய்வாண்டின் போது அந்த முறைப்பாடுகளுள் 430 அதாவது நூற்றுக்கு 71 வீதம் தீர்க்கப்பட்டுள்ளது. இங்கு தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளென விசாரணைக் கோவைகளை மூடி வைப்பது என பொருள்படும். அவ்வாறான சந்தர்ப்பங்கள் என்றால்,

(அ) முறைப்பாட்டாளர்களினால் முறைப்பாடுகள் வாபஸ் பெறுதல்.

(ஆ) முறைப்பாட்டாளர் விசாரணையில் கலந்துகொள்வதற்காக தொடர்ச்சியாக வருகை தராமை.

(இ) விசாரணையின் போது நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிய வருதல்.

(ஈ) விசாரணையின் போது பொலிஸ் உரிய முறையில் செயல்பட்டுள்ளதை அறிதல்.

(உ) தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அறிக்கைகளை கோரும் வேளை பொலிஸ் உத்தியோகத்தர்கள் தவறான முறையில் நடந்திருப்பது அறியவந்துள்ளமையினால் பொலிஸினால் ஒழுக்காற்று நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

(ஊ) பொலிஸ் நடவடிக்கைகள் தாமதமாகும் போது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் விசாரணை காரணமாக விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு பொலிஸினாலயே தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல்.

(எ) குறித்த தரப்பினர்கள் பொலிஸில் சுமுகமான முடிவுக்கு வந்துள்ளதாக விசாரணையின்போது அறியவருதல்.

(ஏ) விசாரணையின் போது முறைப்பாடு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் விடயத்திற்கு உரித்தானதல்ல என்பதை அறிதல்.

(ஐ) விசாரணையின்போது முறைப்பாடு நிரூபிக்கப்படுவதற்காக சாட்சிகள் முன்வராமை.

(ஒ) முறைப்பாட்டாளர்கள் ஒரே தடவையில் முறைப்பாட்டை பொலிஸ்மா அதிபர் உட்பட ஏனைய அதிகாரிகளிடம் சமர்ப்பித்துள்ள வேளைகளில் குறித்த அந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் விசாரணையின் போது தெரியவருதல்.

**8.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்.**

-------------------------------------

தேசிய பொலிஸ் ஆணைக்குழு பராமரித்து வருகின்ற கட்டிடத்தின் மொத்த பரப்பளவு சதுர அடி 9750 ஆகுவதுடன் அதன் சதுர அடியொன்றுக்காக ரூபா 90 பணம் செலுத்தப்படுகிறது. 2012 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 19 திகதி நடைபெற்ற 41 ஆவது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பதவிநிலைத் தீர்மானங்களின் படி இந்த அலுவலகத்திற்கு சதுர அடி 3000 - 4000 இற்கு உட்பட்ட அளவிலான அலுவலகக் கட்டிடமொன்று போதுமானது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அண்ணளவாக சதுர அடியொன்றிற்காக ரூபா 90 வீதம் மேலதிகமான சதுர அடி 5750 அளவுக்காக ரூபா 517,500 பணம் மாதாந்தம் பயனற்ற விதத்தில் செலவு செய்யப்பட்டுள்ளது.

## 8.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 15 | 15 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 03 | - | 03 |
| (இ) | இரண்டாம் நிலை | 33 | 26 | 07 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 13 | 12 | 01 |
| | மொத்தம் | 64 | 53 | 11 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 11 வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கையில் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் இருக்கின்ற 13 சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்களும் இரண்டாம் நிலையில் ஒரு உத்தியோகத்தரும் ஆரம்ப நிலையில் இரண்டு உத்தியோகத்தர்களும் உள்ளடங்கியிருந்தனர்.

## 9. தலைப்பு 9 – நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபை

### 9.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஒக்தோபர் 28 ஆந் திகதி மேன்முறையீட்டு நியாய சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 9.2 கணக்குகள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 9.3 கணக்குகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபையின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றில் 9.4 தொடக்கம் 9.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### 9.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 9.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் ஆணைக்குழுவினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டமானது 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேன்முறையீட்டு புள்ளிவிபரங்களின் அடிப்படையில் கூட்டிணைந்த திட்டம் தயாரிப்பதில் வசதியீனங்கள் நிலவுவதாக சபையின் செயலாளரினால் 2014 சனவரி 07 ஆந் திகதி எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

#### 9.4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மேலே 9.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க 2010 மற்றும் இதற்கு பின்னருள்ள சபையின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 9.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேலே 9.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆணைக்குழுவினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 ஒக்தோபர் 14 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 9.4.4 நிதியேற்பாட்டின் பயன்பாடு

ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் மூலதன செலவினத்திற்காக வழங்கப்பட்ட தேறிய நிதியேற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் 35 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

### 9.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | |
| 2002 இன் 4 ஆம் இலக்க நிருவாக மேன்முறையீட்டு நியாய சபை அதிகாரச்சட்டத்தின் 7 ஆம் பிரிவு | மேன்முறையீட்டு நியாய சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதாவது முறைப்பாடு அது கிடைக்கப்பெற்ற நாள் தொடக்கம் இரண்டு மாத கால எல்லைக்குள் பரீட்சித்து இறுதியான பொருத்தமொன்றைச் செய்ய வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த |

| | |
|---|---|
| | போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. முறைப்பாட்டிற்கான அவதானிப்பு அறிக்கையினைக் கோரும் போது விடையளிப்பவரிடமிருந்தும், அரசாங்க சேவை ஆணைக் குழுவிலிருந்தும் மேற்கொள்ளப்படுகின்ற கோரிக்கைகள் மற்றும் முறைப்பாட்டாளரின் சட்டத்தரணி அல்லது பாதுகாக்கும் உத்தியோகத்தரின் வேண்டுகோளின் பிரகாரம் நாட்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நேர்ந்தமையால் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட கால எல்லைக்குள் முறைப்பாடுகள் தொடர்பாக பொருத்தமானவற்றை அல்லது கட்டளையொன்றை வழங்குவதற்கு தாமதம் ஏற்படுவதாக சபையின் செயலாளரினால் 2014 சனவரி 07 ஆந்திகதி எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 10.4 ஆம் பிரிவு | இந்த ஏற்பாடுகளின் பிரகாரம் சேவைக்காலம் 10 வருடங்களுக்குக் குறைவான உத்தியோகத்தர்களுக்காக 10 வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலத்தில் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் பிணைகாரராக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அத் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தும் இடர் கடன் வழங்கப்பட்டிருந்தது. |

### 9.6 செயலாற்றல்

2010 ஆம் ஆண்டு தொடக்கம் நிறுவனத்திற்குக் கிடைக்கப்பெற்ற முறையீடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட முறையீடுகளின் பொழிப்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஆண்டு | ஆரம்ப மீதி | ஆண்டின் போது பெறப்பட்ட எண்ணிக்கை | ஆண்டின் போது தீர்க்கப்பட்ட எண்ணிக்கை | தீர்க்கப்படாத முறையீடுகளின் எண்ணிக்கை | முறையீடுகளின் சதவீதமாக தீர்க்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 2010 | 254 | 11 | 200 | 65 | 75 |
| 2011 | 65 | 56 | 45 | 76 | 35 |
| 2012 | 76 | 256 | 141 | 191 | 42 |

2010 ஆம் ஆண்டில் முறையீடுகளைத் தீர்த்துவைத்தல் 75 சதவீதமாக இருந்த போதிலும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது அது முறையே 35 சதவீதம் மற்றும் 42 சதவீதமாக இருந்தன.

### 9.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 02 | 02 | - |
| (ஆ) | இரண்டாம் நிலை | 12 | 09 | 03 |
| (இ) | ஆரம்ப நிலை | 04 | 04 | - |
| | மொத்தம் | 18 | 15 | 03 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 3 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 10. தலைப்பு 10 – இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு

### 10.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 சனவரி 06 ஆந் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 10.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 10.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவினால் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) மற்றும் (ஆ) இல் உள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 10.4 இலிருந்து 10.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கு

சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஊழியர்கள் கேட்டு விலகியதன் அடிப்படையில் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 180,887 ஆகும்.

### (ஆ) இலஞ்ச சுற்றிவளைப்புக்களில் இலஞ்சமாகப் பயன்படுத்துவதற்கான முற்பணக் கணக்கு

சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,735,702 ஆக இருந்ததுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| காலம் (வருடம்) | வழக்குகளின் எண்ணிக்கை | பெறுமதி |
|---|---:|---:|
| | | ரூபா |
| 1 இற்குக் குறைவு | 76 | 6,601,980 |
| 2 இற்கும் 5 இற்கும் இடையே | 156 | 4,787,425 |
| 5 இற்கும் 10 இற்கும் இடையே | 62 | 2,953,700 |
| 10 இற்கும் 20 இற்கும் இடையே | 43 | 389,720 |
| 20 இற்கும் 30 இற்கும் இடையே | 08 | 2,625 |

| | | |
|---|---|---|
| 30 இற்கு மேல் | 03 | 252 |
| | -------- | -------------- |
| | 348 | 14,735,702 |
| | ===== | ===== |

## 10.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 10.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் ஆணைக்குழுவினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டமானது 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆணைக்குழுவின் செயற்பொறுப்பின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிப்பதில் வசதியீனங்கள் நிலவுவதால் இத்தேவைப்பாட்டை விடுவிக்குமாறு நிதி அமைச்சிடம் கோரப்பட்டிருப்பதாகவும் ஆணைக்குழுவின் செயலாளரினால் 2014 சனவரி 24 ஆந் திகதி எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

### 10.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆணைக்குழுவினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 நவம்பர் 15 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 10.4.3 உள்ளகக் கணக்காய்வு

ஆணைக்குழுவினால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 10.4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்

ஆணைக்குழுவினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 10.4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

ஆணைக்குழுவின் ஒரு வாகனம் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதனை மீளப்பெற்றுக் கொள்வதற்கோ அல்லது அமைச்சிற்கு கையளிப்பதற்கு 2013 நவம்பர் 15 ஆந் திகதி வரையிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 10.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது ஊழலுக்கு எதிராக உதவியை வழங்குவதற்காக ரூபா 1,000,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக எவ்வித நிகழ்ச்சித் திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது வழக்குப் பொருட்கள் தொடர்பான விபரங்களை கணனிமயப்படுத்தல் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் அது 2013 நவம்பர் 15 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 10.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 34 | 21 | 13 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 05 | 01 | 04 |
| (இ) | இரண்டாம் நிலை | 63 | 51 | 12 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 64 | 51 | 13 |
| | மொத்தம் | 166 | 124 | 42 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 42 வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 11. தலைப்பு 11 – நிதி ஆணைக்குழு

### 11.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நிதி ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 நவம்பர் 27 ஆந் திகதி ஆணைக்குழுவின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 11.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 11.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நிதி ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையின் (அ) மற்றும் (ஆ) வரை காட்டப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 11.4 இலிருந்து 11.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 04 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 25,603,000 தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 06 செலவின விடயங்களுக்காக மிகையான ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தினால் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 5,431,785 ஆக இருந்ததுடன் அது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 35 சதவீதம் தொடக்கம் 98 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(iii) சம்பளம் மற்றும் வேதன செலவின விடயத்திற்காக ரூபா 1,306,935 தொகையான குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் நிதியேற்பாடு பெறப்பட்டிருந்த போதிலும் அது முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

01101 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 181,511 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த மீதிகளை அறவீடு செய்வதற்கு ஆணைக்குழுவினால் இயலாதிருந்தது.

## 11.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 11.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் ஆணைக்குழுவினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டமானது 2014 பெப்ரவரி 17 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 11.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேலே 11.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆணைக்குழுவினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான

செயலாற்றல் அறிக்கை 2014 பெப்ரவரி 17 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 11.4.3 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முறையாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 11.4.4 உள்ளகக் கணக்காய்வு

ஆணைக்குழுவினால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 11.4.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 11.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

ஆணைக்குழுவினால் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் 385 சொத்து அலகுகள் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

## 11.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபத்திற்கு முரணாக 3 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 960,179 தொகையான இடர் கடன் வழங்கப்பட்டிருந்தன.

## 11.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 15 | 06 | 09 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (இ) | இரண்டாம் நிலை | 46 | 30 | 16 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 13 | 06 | 07 |
| | மொத்தம் | 77 | 44 | 33 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 33 வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 12. தலைப்பு 12 – தேசிய கல்வி ஆணைக்குழு

## 12.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 மே 07 ஆந் திகதி ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும்.

அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 12.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 12.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தேசிய கல்வி ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 12.4 இலிருந்து 12.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணல்

ஆணைக்குழுவினால் பின்வரும் பதிவேடுகள் பேணிவரப்பட்டிருக்காததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 நவம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கனணித் துணைச் சாதனங்கள் மற்றும் மென்பாகங்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**(ஆ) பாதீட்டு முரண்**

(i) ஒரு செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 50,000 தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 08 செலவின விடயங்களுக்காக மிகையான ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தினால் ரூபா 14,115,000 தொகையான தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 3,953,852 தொகை அல்லது 28 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 27 சதவீதம் தொடக்கம் 82 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

**(இ) பாதீட்டு உதவிச் சேவை அவசர தேவைப் பொறுப்புக்களின் கீழ் பெறப்பட்ட நிதியேற்பாடு**

09 மீண்டெழும் செலவினங்களின் தேறிய நிதியேற்பாட்டில் 5 சதவீதத்திற்கு மேற்பட்ட ரூபா 4,003,852 தொகையான செலவழிக்கப்படாத நிதியேற்பாடு காணப்படும் போது 2011 ஆம் ஆண்டின் ஆய்வு அறிக்கையொன்றின் மொழிபெயர்ப்புச் செயற்பாடுகளுக்காக ரூபா 281,000 தொகையான குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

## 12.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### வருடாந்த செயலாற்றல் அறிக்கை

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆணைக்குழுவினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 12.5 செயலாற்றல்

செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் எதனையும் நிறைவேற்றுவதற்கு ஆணைக்குழுவினால் முடியாதிருந்ததுடன் அறிவூட்டும் சமூகமொன்றிற்கான கல்விச் செயற்திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 7,306,940 தொகையான உதவிப் பணம் கிடைக்காமையும் ஆணைக் குழுவை நியமிப்பதில் ஏற்பட்ட தாமதமும் அதற்கான காரணமாக இருந்தது.

## 12.6 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நவிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நூலகப் புத்தகங்களின் இருப்பு தொடர்பான மெய்மையாய்வு நிறுவனத்தின் ஆரம்பம் முதலே மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 938,600 செலவில் ஸ்தாபிக்கப்பட்ட தரவு வங்கி நடவடிக்கைகளுக்காக தகுதியான உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆணைக்குழுவினால் அச்சிடப்படுகின்ற புத்தகங்கள் தொடர்பான கிரயத்தை கணிப்பீடு செய்தல் மற்றும் இருப்புக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டிராததுடன் தேவையினைக் கருத்திற் கொள்ளாமல் அச்சிடப்பட்டமையின் காரணமாக 2003 - 2009 இற்கிடைக்கப்பட்ட காலத்தின் போது அச்சிடப்பட்ட 4,382 புத்தகங்கள் ஆணைக்குழுவில் மீதியாகக் காணப்பட்டது.

## 12.7 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 03 | 02 | 01 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 12 | 07 | 05 |
| (இ) | இரண்டாம் நிலை | 10 | 05 | 05 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 12 | 12 | - |
| | மொத்தம் | 37 | 26 | 11 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 11 வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) முறையற்ற வகையில் ஏனைய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்

ஆணைக்குழுவின் பாதுகாப்பு உத்தியோகத்தர் 2005 செப்தெம்பர் தொடக்கம் 2012 திசெம்பர் வரையும் மின்சக்தி எரிபொருள் அமைச்சிற்கும், அதன் பின்னர் விளையாட்டு அமைச்சிற்கும் விடுவிக்கப்பட்டு அக்காலப்பகுதியில் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,833,705 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த

விடுவித்தலின் காரணமாக தனியார் பாதுகாப்புச் சேவை நிறுவனத்திலிருந்து சேவை பெறவேண்டி ஏற்பட்டமையினால் மீளாய்வாண்டின் போது மாத்திரம் ரூபா 547,500 இனைச் செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

**12.8 உள்ளகக் கட்டுபபாடு**

**(அ) உள்ளகக் கணக்காய்வு**

ஆரம்பம் தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆணைக்குழுவினால் உள்ளகக் கணக்காய்வு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுவை அமுல்படுத்துதல்**

2009 செப்தெம்பர் 30 ஆந் திகதி தொடக்கம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**13. தலைப்பு 13 – இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**

**13.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2012 ஒக்தோபர் 30 ஆந் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு

இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 13.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 13.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றில் பின்வரும் 13.4 இலிருந்து 13.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

## 13.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 13.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் ஆணைக்குழுவினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டமானது 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 13.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேலே 13.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆணைக்குழுவினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 13.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 104(1) | ஆணைக்குழுவின் 02 வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பாசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii) நிதிப் பிரமாணம் 110 | இழப்பு மற்றும் நட்டப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) திறைசேரிச் சுற்றுநிருபம்

| | |
|---|---|
| 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றுநிருபம் | ஒவ்வொரு நிலையான சொத்து விடயங்களுக்குரிய அதன் கிரயங்களை அறிந்து கொள்ளல், கைப்பற்றப்பட்ட திகதி, அமைக்கப்பட்டமை போன்ற சகல விடயங்களுடனும் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

(இ) தேசிய நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் சேவைச் சபையின் ஆலோசனைச் சுற்றுநிருபம்

| | |
|---|---|
| 2004 சனவரி 26 ஆந் திகதிய 2004/புச/1 ஆம் இலக்க சுற்றுநிருபம் | சபையின் நூலகத்தில் காணாமல் போயிருந்த 74 புத்தகங்கள் தொடர்பாக சுற்றுநிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |

## 13.6 செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது புலனாய்விற்கு உட்படுத்தப்பட வேண்டிய மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 6,372 ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதி வரையில் புலனாய்வு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2,462 ஆனமையால் ஆண்டின் இறுதி வரையில் மேலும் புலனாய்வுகள் பூர்த்தி செய்யப்படாத முறைப்பாடுகளின் எண்ணிக்கை 3,910 ஆக இருந்தது.

## 13.7 அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2009 நவம்பர் 24 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஏ/08/03/ஐ/ரீ௱ம் ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் செயலாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் ஒப்பந்த மற்றும் அமைய சம்பளம் பெறுகின்ற ஊழியர்களுக்கு, சம்பளத்திற்கு மேலதிகமாகச் செலுத்தப்படுகின்ற 25 சதவீத படிகளுக்கு உரித்தற்றிருந்த போதிலும் அந்த ஆலோசனைகளுக்கு முரணாக 2012 ஆம் ஆண்டின் போது 08 ஒப்பந்த மற்றும் அமைய ஊழியர்களுக்கு 25 சதவீத படியாக ரூபா 303,198 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 13.8 முகாமைத்துவ பலவீனம்

பரிசீலனை செய்யப்பட்ட பிரத்தியேக கோவைகளில் உள்ளடக்கப்பட்ட எந்த கல்விச் சான்றிதழ்களும் உரிய நிறுவனத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 13.9 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 35 | 20 | 15 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 03 | 01 | 02 | - |
| (இ) | இரண்டாம் நிலை | 105 | 105 | - | - |
| (ஈ) | ஆரம்ப நிலை | 52 | 53 | - | 01 |
| (உ) | ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை | - | 08 | - | 08 |
| | மொத்தம் | 195 | 187 | 17 | 09 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 17 வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 யூன் 30 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈ2/01/3/383/1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடித்தின் பிரகாரம் சபையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 195 ஆக இருந்ததுடன் 2013 ஆகஸ்ட் மாதம் வரையிலும் ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறிருக்கும் போது 2010 திசெம்பர் 31 ஆந் திகதிய 26/2010 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஒப்பந்த அடிப்படையில் இருக்கின்ற 04 ஊழியர்கள் மற்றும் அமைய அடிப்படையில் இருக்கின்ற 37 ஊழியர்கள் 2011 ஆகஸ்ட் 01 ஆந் திகதி ஒரு வருட தகுதிகாண் காலத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. சேவையில் நிரந்தரமாக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கு சம்பள படி நிலைக்குரிய மாதாந்த சம்பளம் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் இந்த சகல உத்தியோகத்தர்களுக்கும் நிரந்தரப்படுத்துவதற்கு முன்னர் செலுத்தப்பட்ட ஒப்பந்த மற்றும் அமைய சம்பளம் தொடர்ச்சியாகச் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

## 14. தலைப்பு 14 – சட்டமா அதிபர் திணைக்களம்

### 14.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 நவம்பர் 25 ஆந் திகதி சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின்

வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 14.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 14..3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையின் (அ) மற்றும் (ஆ) இல் காணப்படுகின்ற பொது அவதானிப்புக்கள் மற்றும் 14.4 இலிருந்து 14.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

மூன்று செலவின விடயங்களுக்காக மிகையான ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தினால் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 28 சதவீதம் தொடக்கம் 50 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

01401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 2,181,041 கூட்டுமொத்தமாக இருந்தது.

**14.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**14.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 ஒக்தோபர் மாதம் வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**14.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முறையாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**14.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்**

2012 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 14.5 செயலாற்றல்

2012 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் திணைக்களம் ஆரம்பித்த கோவைகளின் எண்ணிக்கை மற்றும் வேலை முடிவடைந்த கோவைகளின் எண்ணிக்கை தொடர்பான நிலைமை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | பிரிவு | ஆரம்பித்த கோவைகளின் எண்ணிக்கை | வேலை முடிவடைந்த கோவைகளின் எண்ணிக்கை | மேலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய கோவைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | அபராதம் | 3249 | 1107 | 2142 |
| (ஆ) | சிவில் | 2714 | 158 | 2556 |
| (இ) | நீதிமன்றம் | 765 | 636 | 129 |
| (ஈ) | கூட்டுத்தாபனம் | 2123 | 1606 | 517 |
| (உ) | பொது மக்கள் முறைப்பாடு | 16765 | 12049 | 4716 |

## 14.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 213 | 165 | 48 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 12 | 06 | 06 | - |
| (இ) | இரண்டாம் நிலை | 155 | 106 | 49 | - |
| (ஈ) | ஆரம்ப நிலை | 213 | 179 | 34 | - |
| (உ) | ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை | - | 15 | - | 15 |
| | | 593 | 471 | 137 | 15 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 137 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 15. தலைப்பு 15 – சட்ட வரைஞர் திணைக்களம்

### 15.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சட்ட வரைஞர் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஒக்தோபர் 28 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின்

அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 15.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 15.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சட்ட வரைஞர் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையில் (அ) இல் காணப்படுகின்ற பொது அவதானிப்புக்கள் மற்றும் 15.4 முதல் 15.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

(i) ஒரு செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 65,066,000 தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 02 செலவின விடயங்களுக்காக மிகையான ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தினால் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 33 சதவீதம் தொடக்கம் 35 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

## 15.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 15.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் திணைக்களத்தினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டமானது 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பாக 2013 திசெம்பர் மாதத்தின் போது சட்ட வரைஞரினால் பின்வருமாறு எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

‘‘பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள், தற்காலிக உறுப்பினர் வரைவுகள் மற்றும் மாகாண சபைகளிலிருந்து சமர்ப்பிக்கப்படுகின்ற கோரிக்கைகளின் அடிப்படையில் அந்தந்த ஆண்டுகளின் போது அதிகாரச்சட்டம் தயாரித்தல் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் எதிர்வரும் மூன்று வருடங்களுக்கான அதிகாரச் சட்டத்தின் வரைவுத் திட்டமொன்றை தயாரித்தல் நடைமுறைக்குச் சாத்தியமற்றிருந்தது.’’

### 15.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேலே 15.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆணைக்குழுவினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான

செயலாற்றல் அறிக்கை 2013 செப்தெம்பர் மாதம் வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 15.4.3 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வு பிரிவு காணப்படாதிருந்ததுடன் சனாதிபதிச் செயலகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 15.5 செயற்திட்ட அமுலாக்கலில் உள்ள நலிவுகள்

மதிப்பிடப்பட்ட ரூபா 72,500,000 கிரயமான இலங்கை சட்டக் கொள்கைகளைத் திருத்தம் செய்யும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தேவையான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படாமையினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 15.6 செயலாற்றல்

2012 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கடமையின் தன்மை | 2012 சனவரி 01 திகதிக்கு வரைவுகள் பூர்த்தி செய்யப்படாத வேண்டுகோள்களின் எண்ணிக்கை | 2012 ஆம் ஆண்டில் தரப்பினர்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற வேண்டுகோள்களின் எண்ணிக்கை | 2012 திசெம்பர் 31 திகதியாகும் போது வரைவுகள் தயாரிக்கப்பட்டு குறித்த தரப்பினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட எண்ணிக்கை | 2012 திசெம்பர் 31 திகதிக்கு வரைவுகள் பூர்த்தி செய்யப்படாத வேண்டுகோள்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| கட்டளைச் சட்டங்கள் வரைவுபடுத்தல் (அடிப்படை மற்றும் திருத்தச் சட்டங்கள்) | 123 | 40 | 37 | 126 |
| பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரத்தியேக சட்டங்கள் | 79 | 41 | 55 | 65 |

| | | | | |
|---|---|---|---|---|
| உதவிச் சட்டங்கள் | 59 | 121 | 69 | 111 |
| மாகாண சபைகள் சட்டவாக்கங்கள் | 12 | 4 | 5 | 11 |
| | ------- | --------- | --------- | ----------- |
| மொத்தம் | 273 | 206 | 166 | 313 |
| | ==== | ==== | ==== | ==== |

2012 ஆம் ஆண்டில் 92 வரைவுச் சட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் , 23 சட்டங்கள் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு சபாநாயகரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## 15.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 37 | 27 | 10 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 28 | 04 | 24 |
| (இ) | இரண்டாம் நிலை | 62 | 32 | 30 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 24 | 18 | 06 |
| | | ----------- | -------- | ---------- |
| | மொத்தம் | 151 | 81 | 70 |
| | | ==== | ===== | ===== |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 70 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 16. தலைப்பு 16 – பாராளுமன்றம்

### 16.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பாராளுமன்றத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 யூலை 02 ஆந் திகதி பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 16.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 16.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (உ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 16.4 இலிருந்து 16.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணல்

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்தினால் நிலையான சொத்துப் பதிவேடு பேணிவரப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) எழுத்து மூல கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

2012 செப்தெம்பர் மாத்தின் போது நடாத்தப்பட்ட பாராளுமன்ற பொது நலவாய நாடுகளின் மாநாட்டிற்காக 2012 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 100 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதில் மாநாட்டிற்காக ரூபா 87.3 மில்லியன் தொகை பாராளுமன்ற உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு மேலதிகமாக உள்ள ஏனைய வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் செய்யப்பட்ட செலவினம் அல்லது அதற்குரிய எந்தத் தகவல்களும் கணக்காய்விற்காகக் கோரப்பட்டிருந்தும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### (இ) நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டமை

18 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் வழங்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 9 சதவீதம் தொடக்கம் 73 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

பொது வைப்புக் கணக்கின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 7,309,701 ஆக இருந்த போதிலும் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் அந்த மீதி ரூபா 7,273,916 ஆனமையால் ரூபா 35,785 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. 2013 ஆகஸ்ட் மாதம் வரையிலும் அதில் ரூபா 25,135 தொகையான மீதி பிழையாகச் செய்யப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 10,650 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

01601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் மீதான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் படி அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 3,250,590 கூட்டுமொத்தமாக இருந்தது.

## 16.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 16.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் பாராளுமன்றத்தினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டமானது 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. நிதி மற்றும் நிருவாக நடவடிக்கைகள் தொடர்பான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படுவதாக 2013 ஆகஸ்ட் மாதத்தின் போது பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்தினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

### 16.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2012 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பாராளுமன்றத்தினால் அந்த அறிக்கை 2013 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 16.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நியதிச் சட்ட ஏற்பாடுகள் | | |
| 1953 இன் 9 ஆம் இலக்க பாராளுமன்ற பதவியணியினர் அதிகாரச்சட்டம் | - | |
| (i) 4 ஆம் பிரிவு | | பாராளுமன்ற பதவியணியினருக்கு 2010 ஆம் ஆண்டின் போது 3 சம்பள ஏற்றங்களும் 2012 ஆம் ஆண்டின் போது மேலதிக 02 சம்பள ஏற்றங்களும் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) 5 ஆம் பிரிவு | | சம்பளம் செலுத்துவது தொடர்பான நிபந்தனைகள், வாடகைக் கொடுப்பனவு ஏனைய படிகள், சம்பள ஏற்றங்கள் மற்றும் வயது, ஓய்வூதியச் சம்பளம் போன்றவை தொடர்பான அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிப் பிரமாணம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) தாபன விதிக்கோவை

| | | |
|---|---|---|
| II ஆவது அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவு | - | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்க சேவையில் சகல பதவிகளுக்காகவும் ஆட்சேர்க்கும் போது பதவியின் சம்பள அளவு, தகைமைகள், வயது எல்லை மற்றும் ஏனைய விபரங்களை உரியவாறு உள்ளடக்கிய முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு உரிய அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) நிதிப் பிரமாணம்

| | | |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 1645(அ) | | வாகனத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் ஒவ்வொரு வாகனங்களுக்காகவும் சம்பவத் திரட்டுப் புத்தகம் உரிய பிரகாரம் பதியப்பட்டு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) பொது நிருவாகச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 02 ஆம் பந்தி | 646,340 | சுற்றுநிருபத்தின் பிரகாரம் ரூபா 250,000 தொகை அல்லது 10 மாத சம்பளம் என்ற இரண்டில் குறைந்த தொகை இடர் கடனாக வழங்க முடியுமாக இருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக அந்த |

| | |
|---|---|
| | எல்லையினை விஞ்சி கடன் வழங்கப்பட்டிருந்தது. |

(உ) வர்த்தமானி

| | |
|---|---|
| 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரி (விஷேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டம் | 5,079,710 ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்காக முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 16.7 வங்கிக் கணக்கு செயற்பாடுகளில் குறைபாடு

சில வருடங்களாக பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கு தொடர்பாக தயாரிக்கப்பட்ட வங்கிக்கூற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,315,440 தொகையான மீதியை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அந்த நிலைமையை முன்னைய ஆண்டுகளின் போது சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 16.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பாராளுமன்றத்தினால் செய்யப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தன. தெரிவுப் பரிசோதனைகளின் போது அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட கொடுக்கல், வாங்கல்களில் சில கீழே தரப்படுகின்றன.

(அ) போக்குவரத்துக் கஷ்டங்களைக் கருத்திற் கொண்டு பாராளுமன்ற கூட்ட நாட்களில் பி.ப 6.30 இன் பின்னர் சேவையில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களுக்கு நாளொன்றிற்கு ரூபா 750 படி செலுத்துவதற்கு பாராளுமன்ற பதவியணியினரின் ஆலோசனைக் குழு தீர்மானித்திருந்ததுடன் வாகனங்கள் வழங்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கும் இந்தப்படி செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது தலைப்பு 16 இன் பாராளுமன்றத்தின் கீழ் கிடைக்கப் பெற்ற நிதியேற்பாடுகளிலிருந்து வெளிநாட்டு தொடர்புகள் மற்றும் கூட்டமைப்பு அலுவலக செலவின விடயத்தின் கீழ் கிடைத்த ரூபா 30 மில்லியன் தொகை மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் பங்களிப்புப் பண செலவின விடயத்தின் கீழ் கிடைத்த ரூபா 8.5 மில்லியன் தொகையான நிதியேற்பாடு செலவிடப்பட்ட

முறையினைக் காண்பிக்கின்ற எந்தத் தகவல்களும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த மொத்த நிதியேற்பாடும் பாராளுமன்ற உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு மேலதிகமாகவுள்ள ஏனைய இரண்டு வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அந்த சகல பெறுமதியும் ஆண்டின் செலவினமாக திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

## 16.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

### கொள்வனவு வழிகாட்டி கோவையின் செயல்நடைமுறைகளுக்கு மாறானவை

ஜயந்திபுர சிற்றுண்டிச்சாலை வளவில் பாதுகாப்பு வேலியை நிர்மாணித்தல், சமைலறைக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், ஜயந்திபுர சிற்றுண்டிச்சாலை அருகில் கொங்கிறீட் சிறு கற்களைப் பரவுதல் போன்ற செயற்திட்டங்களின் நியமங்கள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 16.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2009 ஆம் ஆண்டு தொடக்கம் பாராளுமன்றத்திற்குச் சொந்தமான ஜயந்திபுர சிற்றுண்டிச்சாலையை வாடகைக்கு வழங்கியதில் மாதாந்தம் ரூபா 42,000 படி அறவிடப்பட வேண்டிய இருந்த போதிலும் சிற்றுண்டிச்சாலை மற்றும் ஏனைய கடைகள் 2012 ஏப்ரல் மாதம் தொடக்கம் ரூபா 30,000 படி வாடகை அறவிடப்பட்டு பொலிஸ் சேவா வனிதா பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான எழுத்து மூல உடன்படிக்கை காணப்படவில்லை. ‘‘சேவா வனிதா’’ பிரிவினால் 6 கடைகளிலிருந்தும் ஒரு கடை ரூபா 30,000 படி மாதாந்த வாடகைக்கு வேறுதரப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்பட்டது.

## 16.11 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 79 | 75 | 04 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 127 | 109 | 18 |
| (இ) | இரண்டாம் நிலை | 208 | 190 | 18 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 469 | 445 | 24 |
| (உ) | ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை | 88 | 88 | |
| | மொத்தம் | 971 | 907 | 64 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் காணப்பட்ட 64 வெற்றிடங்களில் 42 வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2013 யூலை மாதம் வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 17. தலைப்பு 17 – பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகம்

### 17.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 மே 30 ஆந் திகதி பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு

இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 17.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 17.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நிர்வாகப் பணிகள் மீதான பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கில் பின்வரும் 17.4 இலிருந்து 17.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

## 17.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 17.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் அலுவலகத்தினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டமானது 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 17.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### தீர்க்கப்படாத பொறுப்புகள்

அலுவலகத்தினால் 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 47,473 ஆக இருந்ததுடன் அவை ஒரு வருடத்திற்குக் குறைந்த காலப்பகுதிக்குரியதாக இருந்தது.

## 17.6 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரி (விஷேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ரூபா 25,000 இனை விஞ்சுகின்ற கொடுப்பனவுகளுக்காக முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 1,144,016 தொகையான கொடுப்பனவுகளுக்காக முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 17.7 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 3 | 3 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 3 | 3 | - |
| (இ) | இரண்டாம் நிலை | 11 | 9 | 2 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 14 | 12 | 2 |
| | மொத்தம் | 31 | 27 | 4 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

மீளாய்வாண்டின் இறுதியளவில் 04 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 18. தலைப்பு 18 – பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகம்

### 18.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 மே 30 ஆந் திகதி அலுவலகத்தின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 18.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 18.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) மற்றும் (ஆ) இல் உள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 18.4 முதல் 18.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

06 செலவின விடயங்களுக்காக ரூபா 2,259,500 தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,716,608 தொகையைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 542,892 ஆக இருந்தது. ஒவ்வொரு செலவின விடயங்களுக்கும் எஞ்சிய தொகை தேறிய நிதி ஏற்பாட்டில் சேமிப்பு 8 சதவீதம் தொடக்கம் 63 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

### (ஆ) அரசாங்க செலவின முகாமைத்துவம்

2011 திசெம்பர் 31 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2012 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளிலிருந்து ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளில் மூலதன செலவினங்கள் 9 சதவீத சேமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அலுவலகத்தினால் மூலதன செலவினங்களில் 5 சதவீதமே சேமிக்கப்பட்டிருந்தது.

## 18.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 18.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் அலுவலகத்தினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டமானது 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 18.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை செயற்படுத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 18.5 இணக்கமின்மைகள்

நிதிப்பிரமாணம் 231(i)(ii) ஏற்பாடுகளின் பிரகாரம் ரூபா 22,515 தொகையான கொடுப்பனவுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான ஆவணங்கள் எதுவும் இன்றி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 18.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 2 | 2 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 8 | 7 | 1 |
| (இ) | இரண்டாம் நிலை | 15 | 11 | 4 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 17 | 17 | - |
| (உ) | ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை | 1 | 1 | - |
| | மொத்தம் | 43 | 38 | 5 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 05 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 19. தலைப்பு 19 – பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம்

### 19.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 யூன் 11 ஆந் திகதி அலுவலகத்தின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 19.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 19.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையில் (அ) இல் காண்பிக்கப்பட்ட பொது அவதானிப்புக்கள் மற்றும் 19.4 இலிருந்து 19.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

05 செலவின விடயங்களுக்காக மிகையான ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தினால் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 12 சதவீதம் தொடக்கம் 96 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

## 19.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 19.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் அலுவலகத்தினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டமானது 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 19.4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 19.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 19.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

அலுவலகத்தின் 2012 திசெம்பர் 31 அளவில் தீர்க்கப்படாது காணப்படும் பொறுப்புக்கள் ரூபா 723,225 ஆனதுடன் அவை ஒரு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதிக்குரியனவாகும்.

## 19.6 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) தாபனவிதிக் கோவை | | |
| (i) V அத்தியாயத்தின் 7 ஆம் பிரிவு | - | அலுவலகத்தின் இணைப்புச் செயலாளர் ஒருவர் 2012 செப்தெம்பர் 4 ஆந் திகதி தொடக்கம் 2012 ஒக்டோபர் 7 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் சேவைக்கு அறிக்கை இடாதிருந்ததுடன் முறையான வகையில் விடுமுறை அங்கீகரித்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>உத்தியோகத்தர் இக்காலப்பகுதியின் போது அங்கீகாரமின்றி வெளிநாட்டிற்குச் சென்றிருந்தமையும் அக்காலப்பகுதியில் முழுச் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 70,770 தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | XXVIII ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பிரிவு மற்றும் 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 9/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபம் | | சகல உத்தியோகத்தர்களும் வருகை தருகின்ற மற்றும் வெளிச் செல்கின்ற நேரங்கள் முறையான வகையில் கையோப்பத்துடன் குறிப்பிடப்பட வேண்டி இருந்த போதிலும் 3 உத்தியோகத்தர்கள் பேணப்படுகின்ற வரவுப் பதிவேட்டில் வருகை மற்றும் வெளிச் செல்கை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் குறித்த வகையில் வருகை மற்றும் வெளிச் செல்கை தொடர்பாக பிரமாணங்களை கடைப்பிடிப்பதில் சிரமம் உள்ளதாகவும் அரச அலுவலகத்திற்கேனும் இவ்வாறான விடயங்கள் தொடர்பாக யதார்த்தமாகக் கவனிக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தின் செயலாளர் எனக்கு அறிவித்திருந்தார். |

(ஆ) நிதிப்பிரமாணம்

-------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | நி.பி 102-110 | 500,000 | வாகனவிபத்தினால் ஏற்பட்ட நட்டம் தொடர்பாக நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் வாகன விபத்துக்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்குவதற்கு இழப்பு தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி 262(2) | 320,291 | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களிலும் அவற்றை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களிலும் கொடுப்பனவு செய்யப்பட்டது என்ற முத்திரை இடப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) நி.பி 1646 | - | மோட்டார் வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) அரசாங்க நிதிச் சுற்றுநிருபம்

| | | |
|---|---|---|
| 2008 ஏப்ரல் 24 ஆந் திகதிய 431 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 1 ஆம் பந்தி | 1,366,518 | வெளிநாட்டு பிரயாணங்களின் போது விமானப் பயணச் சீட்டைக் கொள்வனவு செய்தல் இலங்கை விமான சேவைகள் கம்பனி அல்லது மிஹின் லங்கா கம்பனியில் செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

(ஈ) தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபம்

| | | |
|---|---|---|
| 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 1.1.3 – 1.1.7 வரையான பந்திகள் | 905,130 | இடம்மாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களிடமிருந்து கடன் மீதியை உரிய காலத்தின் போது மாதாந்த கணக்குப் பொழிப்பின் மூலம் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 19.7 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 3 | 2 | 1 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 11 | 6 | 5 |
| (இ) | இரண்டாம் நிலை | 21 | 19 | 2 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 17 | 15 | 2 |
| (உ) | ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 10 | 10 | - |
| | மொத்தம் | 62 | 52 | 10 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 10 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 20. தலைப்பு 20 – தேர்தல்கள் திணைக்களம்

### 20.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தேர்தல்கள் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 நவம்பர் 27 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில்

விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 20.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 20.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தேர்தல்கள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்களில் பின்வரும் 20.4 இலிருந்து 20.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

## 20.4 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான | | இணக்கமின்மை |
|---|---|---|
| | நிதிப்பிரமாணம் | |
| (அ) | நிதிப்பிரமாணம் 103(1) | திடீர் விபத்துக்கள் தொடர்பாக தாமதமின்றி பொலிசுக்கு அறிக்கை இட வேண்டி இருந்த போதிலும் 03 வாகன விபத்துக்களுக்கு அறிக்கை இடப்பட்டு பொலிஸ் அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 104(1)(அ) | இழப்பு அற்று நட்டம் ஏற்பட்டதுடன் உடனடியாக அதன் பெறுமதி மற்றும் காரணங்கள் என்பவற்றை உரிய முறையில் அறிந்து கொள்வதற்கும் அதற்குப் பொறுப்பான தரப்பினரைத் தீர்மானித்துக் கொள்வதற்கும் பரிசோதனை ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டிய இருந்த போதிலும் வாகன விபத்துத் தொடர்பான அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 20.5 நட்டம் மற்றும் இழப்பு

28 வருடம் பழமை வாய்ந்த ரூபா 202,837 தொகையான 3 நட்ட இழப்புகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 20.6 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 40 | 32 | 08 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 04 | 04 | - |
| (இ) | இரண்டாம் நிலை | 381 | 330 | 51 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 155 | 149 | 6 |
| (உ) | ஏனையவை(அமைய) | 23 | 17 | 6 |
| | மொத்தம் | 603 | 532 | 71 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 71 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 21. தலைப்பு 21 – கணக்காய்வாளர் தலைமை அதிபதி

### 21.1 கணக்காய்வின் நோக்கெல்லை

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஏப்ரல் 28 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு

இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 21.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 21.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 21.4 இலிருந்து 21.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

03 செலவின விடயங்களுக்காக மிகையான ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தினால் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 2,578,513 ஆக இருந்ததுடன் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 83 சதவீதம் தொடக்கம் 92 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) வருமானக் கணக்கு**

(i) சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் ரூபா 193,085,717 தொகையான வருமானம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவையாக இருந்த வருமானத்தை அறவீடு செய்து கொள்வதற்கான பின் தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 162,699,335 கூட்டுத்தொகையான நிலுவை வருமானத்துடன் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் காணப்பட்ட ரூபா 193,085,717 கூட்டுத் தொகையான நிலுவை வருமானத்தை இணக்கம் செய்த போது ரூபா 30,386,382 இனால் அதாவது 18.68 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

02101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 2,342,900 கூட்டுமொத்தமாக இருந்தது.

**21.4 இணக்கமின்மைகள்**

சில கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் தொடர்பாக 264(1) ஆம் இலக்க நிதிப் பிரமாணம் மற்றும் 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரி (விஷேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**21.5 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 355 | 175 | 180 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 1214 | 907 | 307 |
| (இ) | இரண்டாம் நிலை | 178 | 143 | 35 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 181 | 125 | 56 |
| | மொத்தம் | 1928 | 1350 | 578 |

## 22. தலைப்பு 22 – நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்

### 22.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 யூன் 06 ஆந் திகதி திணைக்களத் தலைவரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**22.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**22.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 22.4 இலிருந்து 22.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

அலுவலகத்தினால் 2013 மார்ச் 31 ஆந் திகதியளவில் பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| தலைப்பு/விடய இலக்கம் | கணக்கின் பெயர் |
|---|---|
| 22 | ஒதுக்கீட்டுக் கணக்கு |
| 02201 | அரங்சாங்க உத்தியோகத்தர்களிற்கு முற்பணங்கள் தொடர்பான இணக்கக் கூற்று |

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணல்**

அலுவலகத்தினால் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பேணிவரப்பட்டிருக்கவில்லை.

**(இ) அரசாங்க செலவின முகாமைத்துவம்**

2012 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் பாதீட்டு வருடாந்த மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளிலிருந்து மீண்டெழும் நிதியேற்பாடுகளில் 2 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட வேண்டிய இருந்த போதிலும் அலுவலகத்தினால் மீண்டெழும் நிதியேற்பாடுகளில் 0.78 சதவீதம் மாத்திரமே சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

(i) 02201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 62,988 கூட்டுமொத்தமாக இருந்தது.

(ii) திணைக்களத்தின் புத்தகங்கள் மற்றும் திறைசேரி கணனி அறிக்கைகளின் பிரகாரம் 15 வருடம் தொடக்கம் ரூபா 4,921 தொகையான வேறுபாடு காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போதும் இதனைத் தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிகளிற்கிடையே ரூபா 36,758 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

## 22.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 22.4.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 22.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 22.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2012 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பாராளுமன்றத்தினால் அந்த அறிக்கை 2013 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக 2011 ஆம் ஆண்டிலேயே பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) 2011 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கைகளிலிருந்து சுட்டிக் காட்டப்பட்டிருந்த பற்றாக்குறைகள் தொடர்பாகவும் ஏனைய சிபார்சுகள் தொடர்பாகவும் நிதிப் பிரமாணம் மற்றும் 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்கம் அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(அ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அலுவலகத்தின் தீர்க்கப்படாதிருந்த பொறுப்புக்கள் ரூபா 51,614 ஆனதுடன் அவை ஒரு ஆண்டிற்கும் குறைவான காலத்திலிருந்து நிலவி வருவனவாகும்.

## 22.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 1 | 1 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 2 | 1 | 1 |
| (இ) | இரண்டாம் நிலை | 18 | 9 | 9 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 8 | 2 | 6 |
| (உ) | ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை | 1 | 1 | - |
| | மொத்தம் | 30 | 14 | 16 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 16 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அலுவலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.